2014 ஜூலை 25]

நல்ல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 268 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

269—

ஆரம்ப சுகாதார நிலையம்

***1125—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம், மூக்கனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

வினா எழுப்பி மன்றத்தில் விடையளிக்கும் முன்னரே, மக்கள் கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றும்வண்ணமாக, இன்னும் சொல்லப்போனால், மணியோசை கேட்டு மக்கள் குறை தீர்த்த மனுநீதிச் சோழனையும் தாண்டி, மக்கள் மன ஓசை கேட்டு மக்கள் குறை தீர்ப்பவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், மூக்கனூர் மக்கள் மனம் குளிரும் வகையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாணை வழங்கப்பட்டு, 21-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களாலே திறந்துவைக்கப்பட்டு,

தற்போது அங்கு நாளொன்றுக்கு 80 முதல் 90 நோயாளிகள் வரை சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டு ஆட்சி முழுமையான வளர்ச்சி. மருத்துவர்களுக்கெல்லாம் மருத்துவராகத் திகழ்ந்துவரும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, கோவை மாவட்டம், அன்னூர் ஒன்றியம், மூக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டி விண்ணப்பித்ததற்கு முன்பாக, மக்கள் சிரமத்தைப் போக்க அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைத்தல் மற்றும் விபத்துத் தடுப்புப் பணிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்